4 AUG 1909 MADRAS

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் IX.] AUGUST, 1909-ஞூ ஆகஸ்ற்றுமீ. [இலக்கம் 3.

யானைகளின் சம்ரக்ஷணை.

(தொடர்ச்சி.)

4. யானைகளின் ஆகாரவிஷயத்தில் இந்திய மாவட்டிக்காரர் அஜாக்கிரதையாயும் சிரத்தையற்றவர்களாயு மிருக்கிறார்கள். யானைகளை வைத்துக்கொண்டிருக்கிற பர்மா தேசத்தவர்கள் சாதாரணமாய் இவ்விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். காலையில் யானை போகும் வழியே சென்று அது மேய்ந்ததா, எந்த இடத்தில் நீர் குடித்தது, மண்ணைத் தின்றதா, அதன் வயிறு கழிந்ததா என்பனவற்றைக் கவனிக்கிறார்கள். மண்ணைத் தின்றதென்று கண்டால் ஒருவேளை பேதியாகுமென்று மறுநாளதனிடத்தில் வேலை வாங்குகிறதில்லை. யானைகளை மேயவிடுகிற இடத்தில் நிழலும் ஜலமும் மிகுதியாக விருக்கின்றனவாவென்று தெரிந்துகொள்வது நலம். அவை இல்லாவிடில் அவைகளை வேறு இடத்திற்குக் கொண்டு போகவேண்டும். கட்டுத்தரையிலிருக்கிற யானைகளி னெதிரில் வேலைசெய்யும் நேரம் தவிர மற்ற வேளையில் தீனி இருந்துகொண்டேயிருக்கவேண்டும். யானை ஒரு நாளைக்கு 18 மணி நேரம் தீனி தின்றுகொண்டிருக்குமென்று சொல்லலாம். அதன் வயிறு நிறைவதற்கு எவ்வளவு ஆகாரம் வேண்டியதென்பதை யோசித்துப் பார்த்தால் இது ஆச்சரியமாயிராது. காட்டிலிருக்கப்பட்ட யானைகள் காலத்துக்கும் தேசத்துக்கும் தக்கபடி எல்லாவகையான தீனிகளையும் தின்னும். அவைகளுக்குப் பூவரசன் இலைகளையும் கிளைகளையும் மிதமாகக் கொடுக்கவேண்டும்; ஏனெனில் அவை அதிக சூட்டை யுண்டாக்கும் வஸ்துக்களாம். யானைகள் பலவித மூங்கில்களையும், அவற்றின் துளிர்களையும், காட்டுவாழை மரங்களையும், சாதாரணமான வாழை மரங்களையும், இன்னும் அநேக மரங்களின் பழங்களையும், பட்டைகளையும், அவைகள் தோண்டுகிற மரங்களின் வேர்களையும் தின்கின்றன. அவைகளுக்கு கெய்ங் கிராஸ் (Kaing grass) என்னும் இளநாணல் மிகப் பிரியம். இது அகப்படும்போது சேகரித்து வைத்துக்கொண்டு யானைகளுக்கு மிகுதியாய்க் கொடுக்கவேண்டும். தென் பர்மாவில் அநேக யானைகள் வெட்லா (Wetla) வென்பதையே ஆகாரமாகத் தின்கின்றன. இது அவ்வளவாய் சிலாக்கியமான ஆகாரமல்ல; இது வளர்ந்திருக்கும் சமுத்திரக்கரை மைதானங்களில் காட்டு யானைகள் இரவில் சஞ்சரிக்கிறதேயில்லை. சாதாரணமாய்க் காட்டானைகள் சிறிதும் வேலையின்றி ஏறக்குறைய நாள்முழுவதும் தீனிதின்னும் விதமாயிருக்கின்றன. பழகிய ஆனைகள் வெகு நேரம் வேலை செய்வதாலும் அவைகளுக்கு ஒழிவுநேரம் சொற்பமாதலாலும், அந்நேரத்தில் ஆகாரம் மிகவும் அதிகமாய்க் கொடுக்கவேண்டும்.

5. சாதாரணமாய்த் தினந்தோறும் வேலை செய்யும் யானைகளுக்கு, அரிசி அல்லது தவிடு கலந்த அரிசி, அல்லது அரிசி மா, இவற்றால் செய்த ரொட்டிகளைக் கொடுப்பது வழக்கம். யானை யொன்றுக்கு பிரதிதினம் 30 முதல் 46 இராத்தல் வரை ரொட்டி

கொடுத்தால் போதும். அவைகளை உப்பு, புளியோடு சேர்த்துக்கொடுக்கலாம். கோதுமைத் தவிட்டால் செய்த ரொட்டிகளையும் கொடுக்கிறதுண்டு. அவை இனிப்பாயிருக்கும்பொருட்டுச் சில சமயங்களில் அவற்றிற்கு வெல்லம் அல்லது தேனைத் தடவுகிறதுண்டு. யானைகள், வாழைத்தண்டு, சோளம், தினை முதலியவற்றின் தாள், கரும்பு, நெல்லின்தாள், பழவர்க்கங்களில் பலாப்பழம், அன்னாசிப்பழம் முதலியவைகளையும் ஆசையுடன் சாப்பிடும். இந்திய யானைப் பாகர்கள் யானைகளுக்குச் சீரண சக்தியுண்டாக்கக் கோடைகாலத்தில் வாசனைத்திரவியங்கள் சேர்ந்த மசாலை யென்னும் உருண்டைகளைக் கொடுக்கிறார்கள். அவைகளை அவசியமுள்ளபோது மாத்திரம் ஜாக்கிரதையாகவும், கொஞ்சமாகவும் கொடுக்கவேண்டும். அவைகளை, இஞ்சி, பெருங்காயம், ஏலரிசி, வெள்ளைப்பூண்டு, இலவங்கம், ஜாதிக்காய், மிளகு, மஞ்சள் முதலிய வாசனைத் திரவியங்களால் செய்வார்கள். யானைகளுக்கு இம்மாதிரி மசாலைகளைக் கொடுக்கும்போது சொந்தக்காரர்கள் கூடவிருந்து கொடுப்பிக்க வேண்டும். அம்மசாலைச் சாமான்கள் சர்க்கரை அல்லது தேனும் வெண்ணெயும் சேர்த்து செய்யப்படுகிறபடியால் யானைப்பாகர் முதலான வேலைக்காரர் அம்மருந்துகளை மிகப் பிரியமாய்த் தின்றுவிடுவார்கள். யானைகள் வேலைசெய்து குளித்தபின் அவைகளின் கொட்டாரங்களுக்குப் போகுமுன்னமே அவைகளுக்கு ஆகாரத்தைத் தயாராய் வைத்திருக்கவேண்டும்.

6. யானைகளின் தேகஸ்திதி நன்றாயிருக்க வேண்டுமானால் அவைக ளிருக்குமிடமும் சுற்றுப்பக்கங்களும் பரிசுத்தமா யிருக்க வேண்டும். அவைகளின் மேல்தோலும் சுத்தமாக விருக்கவேண்டும். அவை தாமாகவே காலையிலும் மாலையிலும் நன்றாய்க் குளித்து தம்முடலைச் சுத்தி செய்துகொள்ளும். இதற்காக, யானைகளைப் பிரயாணம் கொண்டுபோகிறவர்கள் அவைகள் குளிக்கத் தாராளமாய் ஜலமிருக்கிற நதிகளுக்கும் குட்டைகளுக்கும் அருகாமையில் கூடாரங்க ளடிப்பது நலம். அப்படி ஒருகால் குளங்குட்டைகளில்லாத விடங்களில் தங்கவேண்டியதிருந்தால் அவைகளின் மேல்தோலைத் தொட்டி தொட்டியாய்ச் சலம்விட்டுக் கழுவவேண்டும். அப்படித் தங்குமிடங்களில் ஈக்களிருந்தால் யானைகளைச் சேற்றில் புரட்டலாம்; உடலில் சேறு ஒட்டிக்கொண்டிருந்தால் ஈக்கள் அவைகளைக் கடியா. யானைகளைக் குளிப்பாட்டாவிட்டால் அவைகளின் தோல் அசுத்தமாகிச் சொரியுண்டாகி அதனால் தேகஸ்திதி கெட்டுப்போகும். அவைகளினுடம்பு உஷ்ணமாயிருந்தால் அவைகளை ஆழமான ஜலத்தில் ஓட்டக்கூடாது; அப்படியோட்டினால் அவைகளுக்கு ஓர்விதமான வலியுண்டாகி அவை முழுகிப்போம். அவைகள் குளித்தபின் இந்தியர்கள் அவைகளின் தலைக்கு எண்ணெய் அல்லது நெய் தடவுகிற வழக்கமுண்டு. இப்படித் தடவுவதனால் தலை குளிர்ச்சியாயும் மிருதுவாயுமிருக்குமென்பது எண்ணம். அப்படிச் செய்வது அவசியமன்று. பர்மா தேசத்தில் இம்மாதிரி செய்வது வழக்கமில்லை.

(இன்னும் வரும்.)

பக்ஷிகளும் தோட்டங்களும்.

நாம் வயதிற் பெரியவர்கள் ஆக ஆக பக்ஷிகளைக் குறித்து அதிகமா யறிந்துவருகிறோம். நாம் அவைகளை நம் சிநேகிதர்களாகப் பாவித்து அவைகளைக் காப்பாற்ற வேண்டும். ஹிமாலய பர்வதத்தின் சுற்றுப்புறங்களிலிருக்கும் பக்ஷிகள் வெகு விசித்திரமா யிருக்கின்றன. இப்பக்ஷிகளில் புளூ ஜே (Blue Jay) என்னும் ஓர்விதப் பக்ஷிகளைப்பற்றிச் சில விஷயங்களைக் குறிக்க வேண்டி யிருக்கிறது. இவை அடிக்கடி தோட்டங்களில் வந்து குறும்புழு, சாதாரண புழுக்கள் இவைகளைத் தின்று தம் காலத்தை வேடிக்கையாகக் கழிக்கும். இப்புழுக்கள் அகப்படாவிட்டால் காட்டிலிருக்கும் சிந்தூரமரத்தின் விதைகளையும் மற்றுமுள்ள தானிய விதைகளையும் தின்று காலத்தைக் கழிக்கும். ஸ்ட்ராபெரி (Strawberry) என்னும் செடியின் பழங்களை யதிகமாகத் தின்னும். சில ஆண்பக்ஷிகள் தோட்டங்களில் வந்து வெகு உல்லாசமாகப் பாடி நம்மைக் களிப்பிக்கும். கூமேயான் என்னும் நாட்டிலிருக்கும் ஒருவித ஆண்பக்ஷியானது தனக் கமைந்திருக்கிற பலவித தொனிகளைக் கொண்டு பாடி ஆனந்தத்தை யுண்டாக்கும். இப்பக்ஷியே தோட்டங்களில் வந்து உட்

கார்ந்து விநோதமாகப் பாடத் தகுந்தது. இதுதவிர மரங்களைத் துளைக்கும் மரங்குத்தி (Woodpecker) என்னும் விசித்திரமான பக்ஷியொன்றிருக்கிறது. இது இடைவிடாமல் மரத்தில் எங்கு துவாரங்களிருக்கின்றனவோ அவைகளின் வழியாய்த் தன் நீண்ட மூக்கினால் கொந்திக்கொண்டு போகும். ஆனால் தான் துவாரம் செய்யும் மரத்தில் பழங்கள் ஏதாவது பழுக்க ஆரம்பித்தால், உடனே மரங்களைத் துளைப்பதை விட்டுப் பழங்களைக் கொந்திக்கொண்டிருக்கும். தோட்டத்திலிருக்கும்படியான பழந்தரும் மரங்களெல்லாவற்றையும் இவ்வாறு செய்யும். இப்பக்ஷிக்கு இலந்தைப்பழத்தின் பேரில் அதிகப் பிரியம். ஆனால் இப்பக்ஷி மரத்தில் ஒரு பழத்தைக் கண்டால் அதை முழுதும் கொத்தித் தின்பதில்லை. ஒரு பழத்தைக் கொஞ்சம் கொத்தினதும் மற்றொரு பழத்தைக் கொத்தப்போகும். இவ்வாறாகத் தோட்டத்திலுள்ள மரங்களின் கனிகளையெல்லாம் பழுக்கவிடாமலே நாசப்படுத்தும். செரி (Cherry) என்னும் பழங்களை, அவை நன்றாய்ப் பழுத்துச் சிவந்த நிறம் திரும்பின பிறகுதான் எந்தப் பக்ஷியும் தின்ன ஆரம்பிக்கும். இதன் மத்தியில் ஒன்றாவது சமீபத்தி லணுகாது. செரி என்னும் பழம் பழுத்தால் காக்கையும் வந்து அப்பழத்தைக் கொத்தித் தின்னும்.

முள்ளம்பன்றியும் தோட்டங்களின்மீது மிகப் பிரியமுடையது. மிருகங்களுக்கு யூகிக்கும் தன்மையும் விவகாரத்தன்மையும் முன்னறிவும் உண்டாவென்று யாராவது சந்தேகப்படும் பக்ஷத்தில், முள்ளம்பன்றியை உதாரணமாக எடுத்துக்கொண்டு அதன் குணாதிசயங்களைப்பற்றி ஆலோசிக்க வேண்டும். முள்ளம்பன்றியானது எல்லா மிருகங்களைக்காட்டிலும் எப்பொழுதும் தீர்க்காலோசனைசெய்து இது சரி, இது தப்பு என்று பகுத்தறியும் தன்மையுடையதாம்.

இவ்விதமாக அநேகவித பக்ஷிகளுக்கும் மிருகங்களுக்கும் முக்கியமாய்க் காய் கனிகள் ஆகாரமா யிருக்கிறபடியால், ஹிந்துக்களுடையவும் மற்ற மதஸ்தர்களுடையவும் சாஸ்திரங்களில் தோட்டங்களை உற்பத்தி செய்து விருத்திசெய்வது விசேஷ புண்ணியமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஜந்துக்களின் மேற்போர்வை.

உலகத்தில் கடவுளால் படைக்கப்பட்ட ஜீவராசிகள் யாவற்றுள்ளும் மனிதனொருவனே அந்தந்தப் பிரதேசத்தின் சீதோஷ்ண நிலைமைக்குத் தக்கபடி தன் பகுத்தறிவைக்கொண்டு ஆடையாதிகளை உடுத்திக் கொள்ளவும் ஆபத்துவேளைகளில் தக்க கருவிகளைக்கொண்டு தன்னைக் காத்துக்கொள்ளவும் தக்கவன். அந்தந்தச் சந்தர்ப்பத்துக்கேற்றபடித் தேகத்தைப் பாதுகாப்பதற்கேற்ற போர்வைகளைத் தேடிக்கொள்வதற்குச் சக்தியும் பகுத்தறிவும் கடவுளால் கொடுக்கப்பெறாத விலங்கு, புள், நீர்வாழ்வன, ஊர்வன என்னும் வகுப்பைச்சேர்ந்த ஜீவராசிகளுக்கு, முழுதொருங் குணர்ந்த முதல்வர் அவை வசிக்கத்தக்க ஸ்தானங்களின் இலட்சணத்துக்குத் தக்கபடி அவற்றிற்கு மேற்போர்வையை அமைத்திருக்கின்றனர்.

புருசான மயிரும், நுண்ணிய மயிரும், கம்பளத்துக் குதவத்தக்க பற்பல ரோமமும், இறகும் முள்ளும், பரால் அல்லது செதிளும், ஓடும், பீரங்கிக் குண்டையும் இலட்சியஞ் செய்யாத தோலும் கடவுளால் அந்தந்த ஜீவராசிகளுக்கு அமைக்கப்பட்டிருக்கும் அருமைப்பாட்டை யோசித்துப்பார்க்கையில், எந்த ஜந்துவுக்காவது இயற்கையில் அமைந்திருக்கும் போர்வையை நீக்கி அதற்குப் பதிலாக வேறொன்றை நாம் அமைப்போமாயின், அவ்வாறு நாம் அமைப்பது எவ்வளவு சிறந்த போர்வையாயிருக்கினும் அது வெகு சீக்கிரத்தில் அந்தப் பிராணியின் சுகாதாரத்தைக் கெடுக்கத்தக்கதாயிருப்பதோடுங்கூட அதற்குப் பிராணஹானியையும் உண்டாக்கிவிடுமென்று பிரத்தியட்சமாய்த் தெரியவருகிறது. எந்தெந்தப் பிராணி எந்தெந்தவிதமாய் எவ்வெவ்விடத்தில் உயிர்வாழ வேண்டுமென்று ஜகத்ரட்சகர் நிர்ணயித்திருக்கின்றாரோ அதற்கேற்றபடியே அந்தப் பிராணியின் போர்வைகளும் அவரால் அமைக்கப்பட்டிருக்கின்றன. மனிதனுக்கு அவ்வாறு இயற்கையில் தக்கதோர் போர்வை அமைந்திராத காரணத்தினாலேயே, அவன் தன்னுடைய உடல்காப்பின் நிமித்தம் பகுத்தறிவென்னும் கருவியைக்கொண்டு மெய்வருந்தி ஆடை முதலியவற்றைத் தேடிக்கொள்ள வேண்டியதென்ப

தும், உஷ்ணப்பிரதேசம், சீதளப்பிரதேசம் என்னும் பேதம் பாராட்டாமல் எவ்விடத்திலேயும் மனிதன் சஞ்சரிக்கத்தக்கவ னென்பதும் உழைப்பாளியா யிருக்கவேண்டியவனென்பதும் கடவுளின் கருத்தென்று நன்கு விளங்குகின்றது.

ஒரே இனத்தைச் சேர்ந்தும் சில பிராணிகள் தாம் உயிர்வாழும் ஸ்தானங்களின் இலட்சணத்துக்குத் தக்கபடி போர்வை முதலிய அங்க வியல்பில் பேதப்படுகின்றன. உரோமம் நிறைந்த சருமத்தை மேற்போர்வையாகக்கொண்ட முயல் என்னும் ஒரு இனத்தைச் சேர்ந்த பிராணிகளை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். சீதளப் பிரதேசத்திலுள்ள முயலின் உரோமம் கனத்து நெருக்கமாய் அதிக உஷ்ணத்தைத் தரத்தக்கதாக விருக்கின்றது. உஷ்ணப்பிரதேசத்திலுள்ள முயல்களுக்கோ உரோமம் அதி நுண்ணியதாய் விடுதிவிடுதியாக இருக்கின்றது. இவ்வாறே நாய், ஆடு முதலிய பிராணிகளின் உரோமமும் சருமமும் அந்தந்தப் பிரதேசங்களின் சீதோஷ்ண நிலைமைக்கு ஏற்றபடி அமைந்திருக்கின்றன. கரடி, ஓநாய், நரி, முயல் முதலிய பிராணிகள் நீரில் சஞ்சரிக்கவேண்டிய அவசியமில்லையானபடியால் அவற்றின் வயிற்றினிடமாக விருக்கும் உரோமத்தைவிட முதுகிலும் பக்கங்களிலுமுள்ள உரோமம் கனத்திருக்கின்றது. நீர்நாய்க்கோவென்றால் வயிற்றினிடமாகவிருக்கும் மயிர் ஏனைய பாகங்களிலுள்ள மயிரைவிட மிகவும் கனத்திருக்கின்றது. நீர்ப்பறவைகளின் இறகுகளும் அவ்வாறே. மீன்கள் நீர்வாழ்வன வாதலின் அவைகளின் செதிள்கள்மீதும் பரால்கள்மீதும் ஒருவித நெய்ப்பசை அமைக்கப்பட் டிருக்கின்றது. ஜலம் அந்தப் பிராணிகளின் மேலே பட்டு அப்படியே கொஞ்சநேரமட்டும் தங்கி அவற்றிற்குச் சங்கடமுண்டாக்காதபடி நெய்ப்பசை அவற்றிற்குப் பெருத்த உபகாரமாயிருக்கின்றது. பட்சிகளுடைய இறகுகளின் மீதுள்ள ஓர்வகையான நெய்ப்பசைச் சம்பந்தமாகிய மினுமினுப்பும் வழவழப்பும் அவ்விதமாகவே அவற்றிற்குப் பெருத்த உபகாரமாயிருக்கின்றன. இப்படியே ஒவ்வொரு பிராணிக்கும் அமைக்கப்பட்டுள்ள அங்க லட்சண விசித்திரத்தை யோசித்துப் பார்க்குமிடத்து, 'யாவும் இயற்கை, எல்லாம் தாமே சந்தர்ப்பங்களுக் கேற்றபடி அமைகின்றன' என்று வாசாகயிங்கரியமாய்க் கூறும் நிரீஸ்வரவாதிகளை,

'நேர்நின்று,
காக்கைவெளிதென்பாரென்சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரு முண்டு'

என்னும் மேலோர் வசனத்தின்படி ஒதுக்குவதே அறிஞர் துணிபாகும். ஒரு அச்சுயந்திரசாலையில் ஒருவர் ஒரு கிரந்தத்தைக் கரத்தினாலெழுதி ஓர் புறத்து வைத்துவிட்டு வந்துவிடுவாராகில், அச்சாலையில் அக்கிரந்தத்திலுள்ள எழுத்துகள் யாவற்றையும் அக்கிரந்தத்தி லுள்ளபடி அடுக்குவதற்கு வேண்டிய எழுத்துகளெல்லாம் நாற்புறமும் குறைவின்றிச் சிதறுண்டு கிடக்குமாயினும் அவற்றைப் பொருள்பட ஒருவன் எடுத்து அடுக்கினாலன்றி அவ்வச்செழுத்துகள் கிரந்தரூபமாகத் தாமே அமையாவாறுபோல், பிரிதிவி முதலிய பஞ்ச பூதங்களும் இவ்வுலகத்தில் குறைவற நாற்புறமும் நிறைந்திருந்தபோதிலும், ஒரு பேரறிவாளனது ஆணையின்றி ஜடப்பொருளாகிய அவை அந்தந்த பிராணிகளின் வாழ்க்கைக்கேற்றபடித் தாமே சருமமாகவும் உரோமமாகவும் செதிளாகவும் இறகு முதலியவைகளாகவும் அமைவது முக்காலும் துர்லபம்.

அந்தந்தப் பிராணிகள் தத்தம் வாழ்க்கைக்கும் அங்க லட்சணத்துக்கும் ஏற்றபடி ஆபத்து நேரிட்டபோது தப்பித்துக்கொள்வதற்கான பற்பல முகாந்தரங்களும் அவைகளுக்கு ஜகத்ரட்சகர் கற்பித்திருக்கின்றனர். பெரும்பாலும் பிராணிகள் யாவும் ஆபத்து நேரிட்டபோது தப்பித்துக்கொள்வதற்காக ஒடுவதே வழக்கம். அதி வேகமாய் ஒடக்கூடாதவைகள் நின்ற நிலையிலேயே இருந்து சத்துருவைத் தம்மாலியன்றவரையில் கொம்பினாலாவது குளம்பினாலாவது நகங்களினாலாவது பற்களினாலாவது எதிர்க்கின்றன. மற்றும் சில, தத்தம் வாசஸ்தலமாகிய பிரிதிவி, அப்பு, ஆகாயம் ஆகிய இவற்றுள் ஒடி மறைகின்றன. இந்தப்படி வேகமாய் ஒடவாகிலும் ஒளிந்து தப்பித்துக்கொள்ளவாகிலும் சக்தியில்லாத சில பிராணிகள் இருந்த விடத்திலிருந்தே மஹா தந்திரமாய்த் தப்பித்துக்கொள்ளுகின்றன. ஆகாயத்தில் சஞ்சரிக்கும் காடை, கவுதாரி, உள்ளான் முதலிய ஓர்வகைச் சிறு பறவை

கள், கருடன், பருந்து, ராஜாளி முதலிய பெரும் ராக்ஷசப் பறவைகள் தம்மை ஹிம்சித்து வாயில் போட்டுக்கொள்ளுமென்று பயந்து அவற்றைக் கண்டமாத்திரத்தில் எங்கெந்த நிலத்திலே இரைதேடிக்கொண்டிருக்கின்றனவோ அந்தந்த நிலத்தின் நிறத்தை உடனே வகித்துத் தம் சத்துருக்களுக்குத் தம் உரு வெளிப்படாதபடி தப்பித்துக் கொள்ளுகின்றன. ஓர்வித ஓணான் மரத்திலிருக்கும்போது தன்னைத் தின்னவோ வேறு வகையினால் தன்னை ஹிம்சிக்கவோ சத்துரு வருகிற அரவத்தைக் கேட்டமாத்திரத்தில் தான் அந்தச் சமயத்தில் இருக்கும் செடியின் பட்டையைப்போலாவது இலையைப் போலாவது ஒரு நொடியில் நிறங்கொண்டு அசைவற்று அந்தச் செடியின் ஓர் பாகமாய்த்தா னிருப்பதுபோலத் தோன்றும். அபாயம் நீங்கிய உடனே தன் இயற்கையுருவத்தை எடுக்கும். இவ்வண்ணமாகவே கம்பளப்பூச்சி வெட்டுக்கிளி முதலிய ஜந்துக்கள் தம்முடைய சத்துருக்களாகிய பறவைகளைக் கண்டமாத்திரத்தில் நோகாமல் இருந்தவிடத்திலேயே இருந்து நிறம் மாறித் தப்பித்துக்கொள்ளுகின்றன. இம்மட்டோ? சில கம்பளப்பூச்சிகள் செடியிலிருக்கும்போது பட்சிகள் தம்மைக் கண்டால் குத்திக்கொண்டு போய்விடும் என்று பயந்து தம் நிறத்தையேயன்றி உருவத்தையும் ஒரு நொடியில் மாற்றிக்கொள்ளுகின்றன. அவை ஒரு முனையில் செடியின் ஓர் பாகத்தைக் கெட்டியாய்ப் பற்றிக்கொண்டு தலை நிமிர்ந்து எழுந்து பற்பல ரூபமாக வளைந்து அச்செடிகளிலுள்ள மொக்குகளைப்போலவும் தறித்து விடப்பட்ட கிளைகளின் நுனிகளைப்போலவும் நிற்கின்றன. அந்தப்படி தாம் உருமாறி வேஷம் போட்டுக்கொண்டு நிற்பதனால் தம்முடைய சத்துருக்களாகிய பட்சிகளை ஏமாற்றிவிடலாம் என்ற பூரண நம்பிக்கை அவைகளுக்கிருந்தாலன்றி மற்றப்படி ஆபத்து நேரிட்டபோது இவ்வளவு விசித்திரங்களைச் செய்துகொள்ள அவைகளுக்குத் துணிவு உண்டாகமாட்டாது. இன்னும் சில கிருமிகள் பழுத்து உலர்ந்த இலைகளைப்போல ஒரு நொடியில் நிறம்மாறி இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்பதுபோல் ஆபத்து நீங்குகிறவரையில் செயலற்றிருக்கின்றன.

அந்தந்த ஜீவராசிகளின் வாழ்க்கைக்குத் தக்கபடி அங்க லட்சண விசித்திரங்களையமைத்தும் ஆபத்து நேரிட்டகாலத்தில் தப்பித்துக்கொள்வதற்கேற்ற உபாயங்களை அவைகளுக்குக் கற்பித்தும்வருகிற பேரறிவாளராகிய கடவுளின் குணப்பெருங்கடலை அளக்க யார்தரம்!

யதார்த்த பாஸ்கரன்.

குதிரைகளுக்குண்டாகும் பலவித வயிற்று நோய்.

வயிற்றுவலி அல்லது பிடிப்பு குதிரைகளுக்கு அதிக பாதையை யுண்டுபண்ணுகிறது. இந்நோயைப்பற்றிச் சாதாரணமாய் குதிரை வைத்திருப்பவர்களுக் கெல்லாம் தெரியும். குதிரைகளுக்குத் தண்ணீர் காட்டுகிற விஷயத்தில் ஜனங்களுக்கிருந்த அஞ்ஞானம் குறைந்துகொண்டு வருவதால் இந்நோய் இப்பொழுது முன்போல் அடிக்கடி தோன்றுவதில்லை. சவாரியிலிருந்து வந்த பிறகு குதிரைகளை ஒரு துளி நீர்கூடக் குடிக்கவொட்டாமல் புல்லையும் கொள்ளையும் அதிகப் பிரயாசத்துடன் தின்னச்செய்வதும் இல்லாவிட்டால் மிகவும் குளிர்ச்சியான ஜலத்தை யதிகமாய்ப் பருகச்செய்வதுமாகிய பழைய வழக்கங்களே இந்நோய்க்கு முக்கிய காரணங்களா யிருக்கின்றன. அதிவிருஷ்டியும் கூடாது, அனாவிருஷ்டியும் கூடாது. எப்பொழுதும் நடுத்தரமாய் நடப்பது பயனுடையதாகும். வேலைசெய்து தேகம் உஷ்ணித்திருக்கும் சமயத்தில் குதிரைகளுக்குத் தண்ணீர் காட்டக் கூடாதென்று பலர் எண்ணங்கொண்டிருந்தார்கள். சிலர் அதிக குளிர்ச்சியான கிணற்று ஜலத்தைக் குடிப்பிக்கும் வழக்கமுள்ளவர்களா யிருந்தார்கள். அப்படிப்பட்ட ஜலம் நீர்மட்டத்தின் சீதோஷ்ணத்திற்கு வேறுபட்டுள்ள ஊற்றுகளினின்று சுரக்கக்கூடும். இதனால் நேரிட்ட ஆபத்துகள்தான், கொஞ்சங்கூட நீர்காட்டாத வழக்கத்தை நிறுத்துவதை வெகுநாள் வரையில் அசாத்தியமாக்கிவிட்டது.

அந்நிய தேசங்களில் பிரயாணஞ்செய்து பல விடங்களிலும் தங்கிக்கொண்டிருந்த அனுபவத்தினால் இப்படிப்பட்ட விஷயங்

களில் அறிவு விசாலிக்கப்பெற்ற இராணுவ உத்தியோகஸ்தர்கள்தான் பழைய வேளாளர் வண்டிக்காரர் முதலியவர்கள் கொண்டிருந்த அபிப்பிராயங்களைப்பற்றித் தீர விசாரிக்கத் தொடங்கினார்கள். குடிக்கப்படும் நீர் வயிற்றிலேயே தங்காமல் முழுவதும் பரவுவதினால் இரத்தத்திற் கலந்து உழைப்பினாலுண்டாகும் நீர்க்குறைவைப் பூர்த்திசெய்து நீர் சுண்டுவதினால் இறுகும் இரத்தத்தை முன்போலாக்குமென்றும், அதனால் குதிரைகளுக்கு வாயில் உமிழ்நீர் ஊறி உலர்ந்த பண்டங்களைச் சுலபமாய் மென்று ஜீரணிக்கச் செய்யும் என்றும் அவர்கள் ஆலோசித்தார்கள். அவ்வாறே இந்த வழக்கத்தை யவர்கள் அநுசரிக்கத் தொடங்கி, இராணுவச் சேனைகளிலும் லண்டன் முதலிய நகரங்களில் குதிரைகள் வேலை செய்கிற பெரிய சாலைகளிலும் இந்தவலி மிகுதியாய்க் குறைந்துவிட்டபடியால் இப்பொழுது எல்லாவிடங்களிலும் பழைய வழக்கத்தை விட்டுவருகிறார்கள். வேலைசெய்த குதிரைகளின் களைப்பைத் தீர்க்க, சுவாசிக்கும் காற்றின் சீதோஷ்ண நிலைக்குத் தகுதியான தண்ணீர் கொஞ்சங் காட்டினாலும் போதுமென்று கண்டுபிடிக்கப்பட்டபின் குளிர்ந்த ஜலத்தினால் அவற்றின் வயிற்றை நிரப்பும்படி யாரும் சொல்ல மாட்டார்கள். வயிற்றில் ஆகாரமில்லாத சமயத்தில் குளிர்ந்த ஜலம் அதிகமாகக் குடிப்பதும், உலர்ந்த தீனி தின்று அதிலும் ஜீரணிப்பதற்குமுன் உப்பும் தன்மையுள்ள தானியங்களைத் தின்று வயிறு அகன்றிருக்கும் சமயங்களில் ஏராளமான தண்ணீர் பருகுவதுமே வயிற்றுவலிக்குக் காரணங்களாயிருக்கின்றன.

லாயங்களிலேயே யிருக்கிற சோம்பேறிக் குதிரைகளுக்கும் சொற்ப வேலைசெய்து மிதமில்லாமல் தண்ணீர் குடிக்கும் குதிரைகளுக்கும் இந்த நோய் வருவதுண்டு. சில குதிரைகள் இயல்பாகவே சொல்ப ஜலம் குடிப்பனவாயிருப்பதினால், அவைகளின் வயிறு சுருக்கமடைந்து பார்க்க நன்றா யிருப்பதில்லை. இப்படிப்பட்ட குதிரைகளை ஒருமிக்க 1 காலன் 2 காலன் தண்ணீர் குடிக்கச்செய்வது இல்லாவிட்டால் ஜலம் சிறிதும் காட்டாம லிருப்பதைப்பார்க்கிலும், அவை நினைத்தபோது கொஞ்சம் கொஞ்சமாய்க் குடிக்கும்படி அவற்றின் தீனிக்குப் பக்கத்திலேயே ஜலம் வைத்துக்கொண்டு வந்தால் அவை யநேகமாய்க் குணப்படும். இந்த சுபாவமுள்ள குதிரைகளின் வாயில் உமிழ்நீர் மிகுதியாக ஊறுவதினால் அவைகள் உட்கொள்ளும் உணவு ஜீரணமாகும்பொழுது கரைவதற்குப் போதுமான ஜலம் இல்லாமல் உணவு இறுகிப்போய் வ்யிற்றுவலி யுண்டாகிறது. அப்பொழுது ஓர் உரமான மலக்கட்டுண்டாகி அடிவயிறு நோகும். இந்த வலி, குளிர்ந்த ஜலம் மிகுதியாய்ப் பருகுவதினாலுண்டாகிற வலிக்கு முற்றிலும் வேறுபட்டது. குளிர்ச்சியானது குடலின் தசை நரம்புகளில் பிடிப்பு உண்டாக்குகிறது. ஆனால் மலக்கட்டானது, குடல் மலத்தை வெளிப்படுத்த வீண் பிரயாசைப்படுவதினால் அதை பலஹீனமாக்கும். இவ்விதமான மலக்கட்டு இத்தேசத்தில் நீர் வாட்சியான காலங்களில் அதிகமாய்ச் சம்பவிப்பதைப் பார்க்கலாம். அக்காலங்களில் குதிரைகள் சத்தில்லாத உணவைத் தின்பதினால் உண்டாகிற ஓர்வித அவாவைத் தணித்துக்கொள்ளும்பொருட்டுப் பூண்டுகளையும் காம்புகளையும் தின்கின்றன. குதிரைக்காரர் குதிரைகளின் மலம் சிறுநீர் இவற்றின் தன்மையைப்பற்றித் தெரிந்து கவனித்தால் அநேகவித கஷ்டங்களைத் தடுக்கலாம். மலம் இறுகிய சிறு கட்டிகளாயிருந்தால் மலச்சிக்கு என்றறியவேண்டும். அப்பொழுது கொஞ்சம் கோதுமைத்தவிட்டைப் பிசைந்து கொடுத்தால் குணமாகும். மிகவும் குளிர்ந்த ஜலத்தைக் குடிப்பதனாலுண்டாகிற வலிப்பு மலச்சிக்குண்டாகி வருகிற வயிற்று வலியைப்பார்க்கிலும் திடீரென்று தீவிரமாயும் வரும் மலச்சிக்குண்டாகும்போது, குதிரைகள் அசௌக்கிய மடைந்திருப்பதை அவை முன்னங்கால்களால் தரையைக் கீறி அடிக்கடி பின்னுக்குத் திரும்பிப் பார்ப்பதினால் அறியலாம். ஆயினும் அவை நோய் பொறுக்கக்கூடாத வவ்வளவு அதிகரித்தாலொழிய தம் பாதையை மறக்கவே யத்தனிக்கும். ஆனால் பிடிப்பு வந்தாலோ பயமும் திகிலும் அடைந்து கவலையுற்ற முகத்தோடு சதா அசைந்துகொண்டும் பெருமூச்சு விட்டுக்கொண்டும் பின்னங்கால்களால் வயிற்றில் உதைத்துக்கொள்வதும் சிலவேளைகளில் பின்னாலிருக்கிற சுவர் கதவு முதலியவற்றை உடைப்பதுமாயிருக்கும்.

மேற்கூறப்பட்ட இருவகை நோய்களி னின்றும் வேறுபட்டதும் சாதாரணமானது மான ஒருவித வயிற்றுவலி யுண்டு. அதாவது வாயுவினாலுண்டாகும் வலியாம். இது ஜீரணியாத உணவுகளினின்று புறப்படும் வாயுக்களால் உண்டாகிறது. குடலிலிருக்கிற வாயு வெளியாகி அதன் நெருக்கம் குறைகிறவரையில் இந்த வலி போகாது. அப்பொழுது எண்ணெய் தடவின கையினால் வயிற்றைப் பிசறி மலமிறக்கினால் கட்டுப்பட்டிருந்த வாயு சுலபமாய் வெளியாகும். குதிரைகளுக்கு எண்ணெய் கொடுப்பது (ஆளிவிதை எண்ணெய் விசேஷமானது) மிகவும் நல்லதென்று ஒரு பெரிய வைத்தியர் சொல்லுகிறார். எண்ணெயானது குடலில் உண்டாகிற வாயுக்களை நீக்கி இறுகி நின்றுபோன மலம் சுலபமாய் வெளியாகும் வண்ணம் ஆசனத்தை மழமழப்பாக்கி அநேகவிதமான வயிற்றுவலிகளின் மூலகாரணத்தைப் போக்குகிறதாம்.

காட்டு மாடுகள்.

ஐந்து வர்த்தமான ஸாரப் பத்திராதிபருக்கு.

ஐயா,

நானுமொரு சிகாரியுமாக ஒருநாள் ஓர் காட்டுக்கு வேட்டையாடச் சென்றோம். அக்காட்டில் நாங்கள் கண்ட மற்ற காலடிகளைவிட இருமடங்கு பெரியவையாயிருந்த சில காலடிகளைப் பார்த்து, அவ்வடிகள் ஓர் பெரிய மாட்டினடிகளாக விருக்கவேண்டுமென்றறிந்து அவற்றைத் தொடர்ந்து அந்த ஜந்துவைத் தேடிக்கொண்டே போனோம். வெகுதூரம் அப்படிச் சென்றபின் வரட்சியாயும் இலைகளால் மூடப்பட்டுமுள்ள நிலங்களில் மிகப் பிரயாசையுடன் அடிக்கடி வழிதப்பி அவ்வடிகளைக் கவனித்தே செல்ல ஓர் குன்றின் பக்கம் சேர, அக்குன்றி னுச்சியில் ஓர் அழகான விருஷபம் மேய்ந்துகொண்டிருக்கக் கண்டோம். எங்கள் வரவை அது கவனிப்பதற்குள் என்னுடனிருந்த சிகாரியதை யடிக்க ஆத்திரப்பட்டு அதன்மேலோர் அம்பை விட்டுவிட்டான். அவ்வம்பு அதற்குப் படாமலே அருகில் விழுந்த சத்தத்தைக் கேட்ட அக்காட்டு விருஷபம் திடுக்கிட்டுக் காதை நிமிர்த்தி வாலைத் தூக்கிக்கொண்டு சுற்றிச் சுற்றி சிவந்த கண்களால் முறைத்து முறைத்துப் பார்த்து எங்களைக் கண்டு எதிர்ப்பட்டு நிற்க நா னதனழகைப் பார்த்து ஆச்சரியப்பட்டுக்கொண்டு நின்றிருந்தேன். என்னுடனிருந்த சிகாரியோ சீக்கிரத்தில் என் கையிலிருந்த துப்பாக்கியைக் காட்டி சுடும்படி என்னை அவசரப்படுத்தியும் அப்பேர்ப்பட்ட அழகான ஜந்துவைக் காரணமின்றிச் சுட்டுப்போட என் கையாடவில்லை. என்னுடனிருந்த கிராதகனோ நான் அம்மாட்டைக் கண்டு பயந்துவிட்டேனென்றும், தாமதித்தால் அது நம்மேல் விழுந்து நம்மைக் கொன்றுவிடுமென்று மெண்ணித் தன் கையிலிருந்த துப்பாக்கியைச் சுட நோக்கியபோது அவ்விருஷபம் அக்குன்றி னப்புறம் பெரிய பள்ளத்தாக்கி லிறங்கிவிட்டது. வெகு பிரயாசையுடன் அம்மாட்டைக் கொல்லவேண்டாமென்று என் தோழனுக்குச் சொல்லி, நாங்களிருவரும் அக்குன்றின்மே லேறிப் பார்க்க, அம்மாடு அத்தாக்கிலோடிய ஓர் அருவியினோரமிருந்த பல மரங்களால் சூழப்பட்ட ஓர் புதரில் நுழைந்துவிட்டது. குன்றினப்புறம் நானும் சிறிதுதூரம் இறங்கிப் பார்க்க அப்புதரி னடுவில் விசாலமான முத்தம்போன்ற விடத்தில் தன்னிரண்டு கன்றுகளுடன் விளையாடிக்கொண்டிருந்த மிகச் சிறந்த காட்டுப்பசு ஒன்று இவ்விருஷபத்தை எதிர்கொண்டுவந் தழைத்து அதன் பயம் தீரும்படி யாதரிப்பதுபோல் அதை மோருவதும் நக்குவதுமாகக் கண்டேன். கன்றுகளும் தாயோடு கூடி அவ்விருஷபத்தைக் கண்டு குலாவின. நெடுநேரமிருந்து பார்க்க அப்பசுவும் விருஷபமும் கன்றுகளும் ஒன்றோடொன்று மிக அன்பு பாராட்டி மனிதர்களைவிட வெகு அந்நியோந்நியமாய் அப்புதரில் வசித்துக்கொண் டிருந்ததாகத் தோன்றியதால், அவ்விருஷபத்தை நான் சுட்டுக்கொன்றுவிட்டிருந்தால் அந்த ஆவும் கன்றுகளும் எவ்வளவு துக்கப்படுமோவென்று நான் மிகத் துயரமடைந்து, அன்றுமுதல் நான் வேட்டையாடப் போகிறதில்லையென்று நிச்சயித்துக்கொண்டேன்.

வேட்டை விட்டோன்.

சமாசாரக் குறிப்புகள்.

1. **கவுதாரிப்புள்.**—பலவர்ண்மான இப்பட்சிகள் ஆசியா ஐரோப்பாக் கண்டங்களின் பல தேசங்களி லிருக்கின்றன. அவை பயிரிடும் புலங்களி லிருக்க மிக விரும்பும். வருடத்தில் பலமுறை முட்டையிட்டு அதிகரிக்கும் நேர்த்தியான இப்பட்சி ஜாதிகளை ஐரோப்பாவில் விசேஷமாய் வேட்டையாடி அழித்துவருவது கேட்கப் பரிதாபமாயிருக்கிறது. தாய் தந்தைப் பட்சிகள் தம் குஞ்சுகளை மிக்க அன்புடன் காப்பாற்றுகின்றன. இவ்வளவு நேசமும் அன்பும் அழகும் கூடியுள்ள பறவைகளை வேட்டையாடிக் கொல்லுபவர்களின் இருதயம் எவ்வளவு கொடூரமானதோ?

---

2. **தார்வாடா ஐந்துக்களின் காட்சி.**—பொம்பாய் இராஜதானி தார்வாடாவில் சென்ற பெப்ருவரிமீ 24வயில் விவசாயப்பண்டங்களின் காட்சியும் ஜந்துக்களின் விநோதகாட்சியும் நடந்தன. அப்பொழுது அநேக நேர்த்தியான தானியதினுசுகளும் கால்நடைகளுங் காட்டப்பட்டன. மேலான கால்நடைகளைக் கொண்டுவந்தவர்களுக்குப் பல சன்மானங்களுங் கொடுக்கப்பட்டன.

---

3. **கோயமுத்தூர் ஜீவ ஹிம்சை நிவாரண சங்கம்.**—இச்சங்கத்தின் நிர்வாக சபையார் ஜூன்மீ 2உ கூடின சபையில், அதுவரை அச்சங்கத்தின் காரியதரிசியாயிருந்த வி. வி. நெல்சன் துரை அவர்களை விட்டுப் பிரிய வேண்டி யிருத்தலின்நிமித்தம் அவர்களுக்குண்டாயிருக்கும் விசனத்தைக் குறித்து வைத்து, அவர் சங்கத்திற்காகச் செய்த பலவித நற்செய்கைகளுக்காக அவர் ஞாபகார்த்தமாக அந்நகரத்தின் பகிரங்கமான ஓர் இடத்தில் அவர் பெயரால் 100 ரூபாய் செலவு செய்து பெரிய நீர்த்தொட்டி யொன்றைக் கட்டிவைக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள். நெல்சன் துரையவர்களின் முயற்சியினுலும் சாமர்த்தியத்தினுலும் அச்சங்கம் அதிக விருத்தியடைந்ததுமன்றி இப்பொழுது அவ்விடத்தில் கட்டப்பட்ட ஜந்துக்களின் வைத்தியசாலை விஷயமாய் அவர் எடுத்துக்கொண்ட பிரயாசை வெகு அதிகம். பெங்களூரில் ஒரு மேன்மையான வம்சத்திற் பிறந்து கோயமுத்தூரில் எட்வர்ட் அண்டு கோ என்கிற மருந்துச்சாலையில் கூட்டாளியும் காரியஸ்தருமாயிருக்கிற இந்த நெல்சன் துரை, இப்பொழுது சென்னை வைத்திய கலாசாலையில் புரொபெசர் பியாட்காக்கு (Badcock) துரையவர்களிடம் தந்த வைத்தியம் கற்க வருகிறார்.

---

4. **தென் இந்தியாவில் கால்நடைகளின் சேதம்.**—சென்ற சில மாதங்களாகத் தென் இந்தியாவில் கால்நடைகளின் மரணம் அதிகரித்துக்கொண்டு வருகிறது. 1908–ம் வருஷத்திய கடைசி மூன்று மாதங்களில் சகல வித நோய்களாலு மிறந்த கால்நடைகளின் தொகுதி 58,985. அதற்கு முந்திய மூன்று மாதங்களில் இறந்தவை 59,836. நோய்வாரி கணக்கிட்டுப் பார்க்குமிடத்து மற்ற வியாதிகளால் மரணமடைந்தனவற்றின் தொகுதி குறைவுபட்டபோதிலும் கோமாரி நோயால்மாத்திரம் சாவு அதிகப்பட்டுக் கொண்டே வருகிறது. இந்நோய், இந்த மூன்று மாதத்தில், மதுரை, தென்னுற்காடு, வடஆற்காடு, செங்கற்பட்டு, திருநெல்வேலி இந்த ஜில்லாக்களில் அதிக மும்முரமாயிருந்ததினுல், முன் மூன்று மாதத்தில் இந்நோயால் 36,945 கால்நடைக ளிறந்திருக்க இப்பொழுது 43,886 ஜீவன்கள் மாய்ந்திருக்கின்றன. காட்டு மிருகங்களா லடியுண்டு செத்த 3,331 ஆடு மாடுகளில், தென்கன்னடத்தில் மாத்திரம் 1,476 மரணங்கள் நேர்ந்தன. துராகிருதமாய் விஷங் கொடுக்கப்பட்டிறந்தவை 13 தான். இந்த நோயின் கொடுமையைக் குறைக்கும்பொருட்டுச் சர்க்காரார் கால்நடைகளுக்கு அம்மை குத்துகிற ஏற்பாடுகள் செய்திருந்தும் ஜனங்கள் தங்களுடைய ஆடு மாடுகளுக்கு அம்மை குத்தாமலிருப்பதினுல் இந்த வியாதி அதிகரித்துக் கொண்டு வருகிறது.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1909.